# வழிகாட்டி

## நவீன அடிமைத்தனம் பற்றிய குழுவுடன் ஈடுபடுவதற்கான வழிகாட்டி

நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றம் நவீன அடிமைத்தனம் பற்றிய குழுவானது நவீன அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்க விரும்புகிறது.

குழுவைச் சந்திக்க ஆர்வமுள்ள தனிநபர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள இந்த ஆவணம் ஒரு வழிகாட்டியாகும்.

### நவீன அடிமைத்தனம் என்றால் என்ன?

நவீன அடிமைத்தனம் என்ற சொல் நியூ சவுத் வேல்ஸில் கட்டாயத் திருமணம், கட்டாய வேலை, அடிமைத்தனம், பாலியல் அடிமைத்தனம், மனிதக் கடத்தல், கடனால் அடிமைப்படுதல், ஏமாற்றி ஆள்சேர்ப்பு, உறுப்பு மற்றும் திசுக் கடத்தல் மற்றும் குழந்தைகளை இணையத்தில் பாலியல் ரீதியாகப் பயன்படுத்திக் கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களை உள்ளடக்கியது.

### பாராளுமன்றம் மற்றும் குழு பற்றி

நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, சட்டங்களை உருவாக்குகிறது மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆராய்கிறது. நவீன அடிமைத்தனத்துக்கான குழு என்பது அரசு மற்றும் அரசு சாராக் கட்சிகளைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நாடாளுமன்றக் குழுவாகும். நவீன அடிமைத்தனத்தை எவ்வாறு நிவர்த்தி செய்வது மற்றும் தடுப்பது என்பது குறித்து நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை வழங்குவதே இதன் பொறுப்பாகும்.

### நான் எப்படிப் பங்கேற்கலாம்?

உங்கள் அனுபவத்தை நீங்கள் எங்களுடன் நேரில் பகிர்ந்து கொள்ளலாம்.
இதை நீங்கள் செய்ய விரும்பினால், பின்வரும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்: modern.slavery@parliament.nsw.gov.au

உங்கள் முதல் மற்றும் கடைசிப் பெயர், உங்கள் தொடர்பு எண் மற்றும் உங்கள் அனுபவத்தைப் பற்றிய சில முக்கிய உண்மைகளை தயவுசெய்து அதில் சேர்க்கவும் - அல்லது 02 9230 3081 என்ற எண்ணில் எங்களை அழைக்கவும்.

நீங்கள் விரும்பினால், எங்களுக்கு ஒரு குறுகிய மின்னஞ்சல் அல்லது கடிதம் அனுப்புவதன் மூலம் நீங்கள் உங்கள் அனுபவங்களையும், எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளலாம். இதை நாங்கள் 'சமர்ப்பித்தல்' என்று அழைக்கிறோம். மேலதிகத் தகவல்களுக்குத் தயவுசெய்து எங்களது சமர்ப்பித்தலைச் செய்வதற்கான வழிகாட்டியைப் பார்க்கவும்.

### நான் இரகசியமாகப் பங்கேற்கலாமா?

நீங்கள் விரும்பினால் இரகசியமாகப் பங்கேற்கத் தெரிவுகள் உள்ளன.

நீங்கள் குழுவுடன் நேரில் பேச விரும்பினால், அதை நீங்கள் இரகசியமாகவோ அல்லது பொதுவிலோ செய்யலாம். நீங்கள் குழுவிற்கு எழுத விரும்பினால், உங்கள் சமர்ப்பித்தலை நாங்கள் இரகசியமாக வைத்துக் கொள்ளலாம், எங்கள் இணையதளத்தில் அதைப் பகுதிகளாகவோ அல்லது முழுமையாக வெளியிடலாம்.

நீங்கள் பொதுவில் பகிரங்கமாகப் பகிரும் தகவல்கள் குழுவின் இணையப்பக்கத்தில் வெளியிடப்படும், மேலும் அவை குழுவின் அறிக்கையிலும் சேர்க்கப்படலாம், அத்துடன் அவை இணையத்திலும் கிடைக்கும்.

## மேலும் தகவல்கள்

தற்போதைய விசாரணைகள் பற்றிய தகவல்களுக்கு இணையதளத்தைப் பார்க்கவும்.
மொழிபெயர்ப்பு உதவிக்கு குழு ஊழியர்களைத் தொடர்பு கொள்ளவும்.

www.bit.ly/ms-committee (02) 9230 308

modern.slavery@parliament.nsw.gov.au

# வழிகாட்டி

## நவீன அடிமைத்தனம் பற்றிய குழுவுடன் ஈடுபடுவதற்கான வழிகாட்டி

### அடுத்து என்ன நடக்கும்?

குழுவைச் சந்திக்க நீங்கள் ஆர்வம் தெரிவித்திருந்தால், அடுத்த கட்ட நடவடிக்கைகளைப் பற்றி விவாதிக்க செயலகம் உங்களைத் தொடர்பு கொள்ளும்.

நீங்கள் ஒரு சமர்ப்பித்தலைச் செய்திருந்தால், செயலகம் அதைப் படித்து, ஏதேனும் இரகசியத்தன்மையுள்ள காரியங்களைப் பற்றி விவாதிக்க உங்களை அழைக்கும். பின்னர் செயலகம் உங்கள் சமர்ப்பித்தலைக் குழுவிடம் வழங்கும்.

### குழுவால் என்ன சாதிக்க முடியும்?

எதிர்காலத்தில் நவீன அடிமைத்தனத்தை நிறுத்தவும், மற்றும் தடுக்கவும் நவீன அடிமைத்தனச் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது குறித்து நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை வழங்க, நேரடி அனுபவமுள்ள மக்களின் சொந்த அனுபவங்களிலிருந்து குழு கற்றுக் கொள்ளும். தனிப்பட்ட வழக்குகளை எங்களால் விசாரிக்கவோ அல்லது தீர்க்கவோ முடியாது.

### ஆதரவு கிடைக்குமா?

நவீன அடிமைத்தனத்தைப் பற்றிப் பேசுவது சிலருக்குக் கடினமாக இருக்கலாம் என்பதை நாங்கள் அறிவோம். எங்களுடன் பேச விரும்பும் நபர்களுக்கு ஆதரவளிப்பதற்கான வழிகள் எங்களிடம் உள்ளன. இதை எந்த நேரத்திலும் நாங்கள் உங்களுடன் விவாதிக்கமுடியும்.

### குழுவில் யார் இருக்கிறார்கள்?

இந்தக் குழுவில் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்:

- தலைவர், ஜோ மெக்கீர் - Joe McGirr (சுயேச்சை, சட்டமன்ற உறுப்பினர்)
- துணைத் தலைவர், ஜென்னி லியோங் - Jenny Leong (பசுமைக் கட்சி, சட்டமன்ற உறுப்பினர்)
- டினா அய்யாத் - Tina Ayyad (லிபரல் கட்சி, சட்டமன்ற உறுப்பினர்)
- ராபர்ட் போர்சக் - Robert Borsak (சுடுபவர்கள், மீனவர்கள் மற்றும் விவசாயிகள் கட்சி, சட்ட மேலவை உறுப்பினர்)
- கிரெக் டோனெல்லி - Greg Donnelly (ஆஸ்திரேலியத் தொழிலாளர் கட்சி, சட்ட மேலவை உறுப்பினர்)
- சாரா கைன் - Sarah Kaine (ஆஸ்திரேலியத் தொழிலாளர் கட்சி, சட்ட மேலவை உறுப்பினர்)
- ஜலீன் மெக்டொனால்ட் - Aileen MacDonald (லிபரல் கட்சி, சட்ட மேலவை உறுப்பினர்)
- லிண்டா வோல்ட்ஸ் - Lynda Voltz (ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சி, சட்டமன்ற உறுப்பினர்)

### செயலகம் என்பது என்ன?

செயலகம் குழுவை ஆதரிக்கிறது, மேலும் அது உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியும். modern.slavery@parliament.nsw.gov.au என்ற இணையதளத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம் அல்லது 02 9230 3081 என்ற எண்ணில் எங்களை அழைக்கலாம்.

## புகாரளித்தல், உதவி, ஆதரவு

நவீன அடிமைத்தனத்தைப் பற்றிப் புகாரளிக்க

- 1800 FREEDOM: நியூ சவுத் வேல்ஸ் அடிமைத்தன எதிர்ப்பு ஆணையரிடமிருந்து இரகசிய ஆதரவு மற்றும் உதவிக்கு 1800 FREEDOM (1800 3733366) என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது antislavery@dcj.nsw.gov.au என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- அவசரகால உதவி: உங்கள் பாதுகாப்பு அல்லது மற்றொரு நபரின் பாதுகாப்பு குறித்து உடனடியான கவலைகள் இருந்தால் மூன்று பூஜ்யம் (000) என்ற எண்ணில் அழைக்கவும்

சட்ட அமலாக்கத்துறைக்குப் புகாரளிக்க

- நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை: 131 444 என்ற எண்ணில் அழைக்கவும்
- குற்றத் தடுப்பு அதிகாரிகள் (Crimestoppers): 1800 333 000 என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது இணையத்தில் புகாரளிக்கவும்
- ஆஸ்திரேலிய மத்தியக் காவல்துறை (AFP): 131 237 (131AFP) என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது www.afp.gov.au/report-crime என்ற AFP இணையதளத்துக்குச் செல்லவும்

கிடைக்கக்கூடிய மற்ற ஆதாரவளங்களும் மற்றும் ஆதரவும் குழுவின் இணையப்பக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன.